# தமிழ்நாட்டை உயரத்தில் கொண்டு நிறுத்தியவர் கலைஞர்!

தமிழ்நாட்டின் நீள, அகலத்திற்குமாகத் தீராது நெடுங்கணக்குப் பேசியவர்; அதற்குக் குன்றிமணியும் குறையாமல், அதற்குள்நின்று களமாடிய படியே, தன் நேரங்களையே களவாடி, எழுதியெழுதித் தீர்த்தவர் - கவிதைகள், கட்டுரைகள், கதைகள், புதினங்கள், நாடகங்கள், உடன்பிறப்பிற்கான கடிதங்கள், கேள்வி பதில்கள், திரைக் கதைகள், திரைப் பாடல்கள், திருக்குறள் உரை, சங்கத் தமிழ், தொல்காப்பியப் பூங்கா என்று தமிழில் மூழ்கி முத்தெடுத்து, தமிழைப் பூப்பந்தாடிக் களித்தவர்; வாசிப்பில் வசந்தத்தைத் தேடியவர்! இதுபோக, தமிழரின் நெஞ்சு முடியை நிமிர்த்தி விட்ட, நாடக திரை வசனகர்த்தா அவர்! பத்திரிகையாளர் பணி; 1969 முதல் 2018 வரையும் கட்சித் தலைமைப் பொறுப்பு; ஐந்து முறை தமிழ்நாடு அரசு நிர்வாகத்தின் அட்சய முதல்வர்; எதிர்க்கட்சித் தகுதித் தலைவர்; திரைப் படத் தயாரிப்பாளர்; மக்கள் பணியின் மகேசர்; 1957 லிருந்து போட்டியிட்ட தொகுதியிலெல்லாம், 13 முறையும் வெற்றி என்பதை மட்டுமே கண்டவர்! வள்ளுவருக்குக் கோட்டம் எடுத்தவர்; குமரிமுனையில் 133 அடி உயர வள்ளுவரை நிறுவி, தமிழைத் தரணிக்கே கலங்கரை விளக்காக்கியவர்; பெரியார் சமத்துவபுரம் கண்டவர்; அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்க ஆணையிட்டவர்; பெண் சொத்துரிமையைச் சட்டமாக்கியவர்; சத்துணவைச் சத்து உணவு ஆக்கியவர்: சமச்சீர் கல்விக்குச் சாமரம் வீசியவர்இதற்குள்ளே, காதல், உறவு, நேசம், பாசம், மோதல் ஆகியவற்றிற்கும் நேரம் ஒதுக்கியவர்! இன்னும் இன்னுமென்று, தன் படைப்பு மனத்திற்கு வடிகாலாய், நிர்வாகத்தின் எதுவொன்றையும் அழகாக ஆக்கிப் பார்த்தவர் இப்படியெல்லாம், மனசுக்குள் புதுப்புது வடிவமெடுத்து, அவரின் ஒவ்வொரு அசைவையும், கழகத்தவர்களை இரசிக்கச் செய்தவர்! பத்திரிகையாளர் சந்திப்பு - சட்டமன்றக் கேள்வி நேரம், இரண்டையும் குதூகலமாக்கியவர்!-எளிமையாய்ச் சொல்வதெனில், இத்தனை அலங்காரங்களுக்கும் உரியவர் - அவர் 'கலைஞர்'!

**கலைஞர் மீதான பிரமிப்புகள் இன்னமும் விலகவில்லை. அவரின் எழுத்துகள், அவரின் எழுத்தில் உருவான திரைப் படங்கள், அவரின் உன்னதம் பேசும் நினைவுச் சின்னங்கள்- அண்ணா நினைவு நூற்றாண்டு நூலகம் உட்பட -தமிழ்ச் சமூகத்திற்கான அவரின் அயர்வில்லா உழைப்பை என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும்!, மார்க்ஸின் செயற்பாட்டாளராக, சோசலிசம் அமைக்க லெனின் அமைந்ததைப் போல், பெரியாரின் சமநீதி/ சமூகநீதியைச் சனநாயகத்தில் நடைமுறைப்படுத்தும் அதிபுத்திசாலித்தன அதிகார சக்தியாகக் கலைஞர் விளங்கியிருக்கிறார் என்பது புரிகிறது. தமிழ்நாட்டை உயரத்தில்கொண்டு நிறுத்த, எல்லாத் திசைகளிலும், அவர் தன் கண்களையும் காதுகளையும் பொருத்தி வைத்திருந்தார் என்பது தெரிகிறது. அதனால் தான் இன்று, மற்றவர்கள் பொறாமைப்படும் உயரத்தில் தமிழ்நாடு கொண்டு நிறுத்தப்பட்டிருக்கிறது என்றுரைப்பது, வெற்றுப் புகழ்மொழி அன்று; மெய்மொழி!**

சில நன்மைகளைப் பெற, சில விட்டுக் கொடுத்தல்கள் அவசியமாகி இருக்கலாம்; காலம் அறிதல், இடன் அறிதல், அவை அறிதல், ஒப்புரவு அறிதல், குறிப்பு அறிதல், செய் நன்றி அறிதல்இவை இல்லாமையா சமூக வாழ்க்கை? ஆனால், எந்தச் சூழலிலும் சுயமரியாதையைப் பங்கப்படுத்தி, கட்சியை/ஆட்சியைத் தக்கவைக்க அவர் என்றும் விரும்பியதில்லை என்பது, அவரின் வாழ்க்கை சொல்லுகிற அறமாயிருக்கிறது. இவற்றையெல்லாம், தூரத்திலிருந்தே அசை போட முடிகிறதேயொழிய, அவரின் பக்கத்தில் நின்று, அவரிடம் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு என க்கு அமையவில்லை அமைத்தும் கொள்ளவில்லை. அதற்குக் காரணம், 'என் இயல்பு' என்று எளிதாகக் கடந்து செல்லலாம். ஆயினும், அருகிலிருந்து அவரை அண்ணாந்து பார்த்து அதிசயித்த இடங்களும், எனக்குள்ளே இன்னமும் கவிதை பாடிக் கொண்டுதானிருக்கின்றன.

தமிழ்நாடு அரசின் சார்பில், கலை, இலக்கியத்தை வளர்ப்பதற்குரிய கீர்த்திமிக்க அமைப்பாகக் 'குறள் பீடம்' எனும் அமைப்பு 1998 ஆம் ஆண்டு அன்றையத் தமிழ்நாட்டு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் உருவாக்கப்பட்டிருந்தது. அதில் நானொரு உறுப்பினராகச் சேர்க்கப்பட்டிருந்தேன். அந்தக் கூட்டத்தில், அவருக்கு எதிரே அமர்ந்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும், என் கருத்துகளைச் சொன்னதும், பசுமையாக மனசிற்குள் மணம்வீசிக் கிடக்கிறது. அவரின் கறுப்புக் கண்ணாடியை மீறி, அவரின் மனசின் மெல்லிய அசைவுகளைப் புரிய முயன்றது, நாடகக்காரன் எனக்கான ஒரு எளிய பயிற்சியாக அன்று அமைந்தது. என்ன காரணத்தாலோ, இரண்டு கூட்டங்களுக்குப் பின், அந்தக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றிருக்கவில்லை. ஆட்சி மாற்றம், ஒரு காரணமாய் இருந்திருக்கக்கூடும்!

அதன்பின், 2008 இல், அவர் கையால் விருது பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது, தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்திற்கு 2007 இல் கலைஞர் வழங்கிய ஒரு கோடி ரூபாய் வைப்புத் தொகையில், அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி, அதிலிருந்து கிடை க்கும் வங்கி வட்டி வருமானம் மூலம், வருடம்தோறும் நான்கு தமிழ் எழுத்தாளர்கள், பிற இந்திய மொழி எழுத்தாளர் ஒருவர், ஆங்கில இலக்கிய எழுத்தாளர் ஒருவர் என ஆறு எழுத்தாளர்களுக்கு தலா ஒரு லட்சம் வீதம் பொற்கிழியும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. கலைஞர் பொற்கிழி விருது தொடங்கிய முதல் ஆண்டிலேயே, நாடகத்திற்கான விருது எனக்கு வழங்கப்பட்டது. பகுத்தறிவு நாடகக்காரனாக, என்னை அவரிடம் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள். 'கலகக்காரர் தோழர் பெரியார்' செய்திருந்த கைங்கர்யம் இது என்று பின்னால் தெரிந்தது. தேர்வாளர்கள் பட்டியல் கலைஞரின் பார்வைக்குப் போனபோது, என் பெயர் வருகையில், 'யாரு. . .பெரியார் ராமசாமியா' என்று அவர், விழிகளை மேல்நோக்கிப் பார்த்து, 'டிக்' செய்ததாகச் செவிவழிச்செய்தி வந்தது. 'எந்த ராமசாமி' என்பதற்கான அவரின் எளிய அடையாளப்படுத்தல் அது! அதிகம் தொடர்பில்லை என்றபோதும், அவர் மனதிற்குள் நானும் பெரியாரும் என் நாடகச் செயற்பாடுகளும் இருந்தன என்பது, இன்றைக்கு நினைத்தாலும் ஆச்சரியப்பட வைக்கிறது. விருது விழாவில் நாங்கள் அமர்ந்திருக்கிறோம். சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி, இயலாமையின் வடு யாருக்கும் தெரிந்துவிடாமல், புன்னகையால் தன்னைப் போர்த்தியபடி, வருகிறார். என் பெயர் உச்சரிக்கப்படுகையில், அவர் அருகில் வருகிறேன். சக்கர நாற்காலியிலிருந்து எழுந்து, பொற்கிழிப் பெட்டியை அவர் கையால் வழங்கி, நீண்ட புகழாடையை என் கழுத்தினில் அவர் சாத்துகிற அந்தக் கணம், என் கையும் தலையும் கவித்து நிற்க, என் அனைத்து நாடியும் ஒரு நொடி அசைவற்று நின்றிருந்தது.



இப்படியேதான், விருது பெற்ற அனைவருக்கும் அன்று இருந்திருக்கும். இவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பெரும் தகைமை இது - அவர் கரத்தைப் பற்றிக் கொள்ளவேண்டும்; கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும்-எல்லாம் மனக்கணக்காகவே நின்றிருந்தன. அவர் இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்; என்னால் தான் இயங்க முடியாது, இதயம் ஒரு நொடி நின்று, இயங்கத் தொடங்கியது. எப்பேர்ப்பட்ட பண்பாளரின் பக்கத்தில் நான்! சாத்துகிற அவர் கரத்தின் ஸ்பரிசம், என் உடலுக்குள் மின்சாரத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

இது,1978 இல், டெல்லி ஸ்ரீராம் சென்டரில், 'பிணம் தின்னும் சாத்திரங்கள்' நாடகத்தில் என் நடிப்பைப் பார்த்துவிட்டு, என் பேராசிரியர் முத்துச்சண்முகனார், அவரின் ஆய்வு மாணவனாகிய என்னை, நெஞ்சாரக் கட்டித் தழுவிய அந்தக் குளிர்ந்த நொடியைப்போல், மறக்கவொண்ணாமல் என் மனதிற்குள், தாய்மையின் சிறகாக இனித்திருந்தது. நான் பெற்ற பேறு அது! அதற்கான நன்றியைக்கூட, இப்படித்தான் இப்போது தான் என்னால் பகிர முடிகிறது.



## முனைவர் மு.இராமசுவாமி

திரைப்படத் திறனாய்வாளர்,
நாடகக் கலைஞர்

இது முடிந்து கொஞ்ச காலத்திலேயே, 2008இல் நிகழ்ந்த, 2007ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருது வழங்கும் நிகழ்ச்சியில் இன்னொரு 'ஸ்பரிச' சந்திப்பு! நாடக ஆசிரியர் என்பதற்கான கலைமாமணி விருது எனக்கு! மேடையில் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா நின்று கொண்டு விருதுப் பத்திரத்தை வழங்குகிறார். அவர், அன்றைக்கு வணங்கத்தக்கதான ஆளுநர்! அருகில் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி, ஒவ்வொருவருக்கும் கழுத்தில் பதக்கத்தை மாட்டிக் கொண்டிருக்கிறார் முதல்வர் கலைஞர்! என் கழுத்திலும் மாட்டப்படுகிறது. வாஞ்சையுடன் அவர் கரத்தை என் கரங்களுக்குள் பொத்திக் கொண்டு,

என் கண்ணில் ஒற்றிக்கொண்டு, இதயமொழியில் நன்றி கூறி வெளிவருகையிலும், அவர் நாற்காலி இருக்கையையும் மீறி, இமயமலைச் சிகரமாக எனக்குள் உயர்ந்து நின்றார். 2009 இல் அண்ணா நூற்றாண்டு விழா மலர்ப் பணி - என் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரின் நம்பிக்கைக்குரிய தோழமை நான் என்பதால், அதை அழகுபடுத்தும் பணி எனக்குத் தரப்பெற்றிருந்தது. இரவு, பகல் என்றெதுமில்லாமல், 'வேலை, வேலையே வாழ்க்கை' என்றாகி, கண்களில் ஒற்றிக் கொள்ளும்படி, வெளிவந்திருந்தது மலர்! முதல்வருக்கு முழு திருப்தி என்றார்.

2010 இல் கோவையில் நடைபெறுவதாயிருந்த 'உலகத் தமிழ்ச் செம்மொழி மாநா'ட்டு' ஆய்வரங்கப் பணிகள், எதிர்பார்த்தபடியே, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களின் தோள்களில் வந்து விழுந்தன. அவருக்குத் தோள்கொடுத்து அலைந்து திரிந்ததிலும், அதில் 'வலி அறுப்பு' நாடகத்தை நிகழ்த்துவதிலும், என்னையே அந்த மாநாட்டிற்கு ஒப்புக் கொடுத்திருந்தேன். 7000 தமிழறிஞர்கள் கட்டுரைகள் வழங்கிய ஆய்வுத் திருவிழா அது! அந்த மாநாட்டின் முடிவாக, 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, 'உலகத் தமிழ்ச் செம்மொழித் தொல்காப்பியர் பேரவை' ஒன்று, கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அதன் தலைவர் கலைஞர்! செயலாளர். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தராயிருந்த பேராசிரியர் ம.இராசேந்திரன்! இயக்குநர் நான்! ஓராண்டு, அரசு ஆணைக்கேற்ப, அயற்பணி அடிப்படையில் நான் 'உலகத் தமிழ்ச் செம்மொழித் தொல்காப்பியர் பேரவை'க்குத் தாரை வார்க்கப்பட்டிருந்தேன். அது ஒரு கனாக் காலம்! 2011 இல் வந்த தேர்தல், எல்லாவற்றையும் திசைமாற்றிப் போட்டுவிட்டது. நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பி வந்ததே தனிப்பெருங்கதை! ஆனால், பேராசிரியர் ம.ரா.வுடனான நட்பிற்குள்ளும், கலைஞரின் சேமிப்பிற்குள்ளும் நான் இருந்திருக்கிறேன் என்கிற அந்த நிஜத்தின் கிளைக் கதை அது!

'கலைஞர் பதில்கள்' என்கிற பகுதியில், கலைஞர் மொழியில் கலைஞர் எழுது கோலால் பதியப்பட்டிருக்கிறது. பத்திரிக்கைகளில் வந்திருந்த பல செய்திகளை, கேள்விகளாகக் கேட்டு, அதற்கு அவர் பதில் சொல்லுகிற பாங்கில், அந்தக் கேள்வி-பதில் பகுதி அமையும். அப்போதைக்கப்போது, அரசியல், சமூக, நிர்வாகத் தளங்களில் நிகழும் குழறுபடிகளை, இரத்தினச் சுருக்கமாக, கேள்வி-பதிலாக எடுத்துவைத்துத் தன் உடன்பிறப்புகளை அரசியற்படுத்தும் அழகிய எழுத்தோவியம் அது! 10.02.2016 இல், நான் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தேடுதல் குழுவின் உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகுகிறேன். 17.02.2016 இல் மதுரையில் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி, நான் வெளியேறியதற்கான காரணங்களைச் சொல்லுகிறேன். 'வரலாற்றுச் சிறப்புமிக்க அ.தி.மு.க. ஆட்சியில் அதிகாரிகளின் தற்கொலைகள்' எனும் பெரும் தலைப்பில், 'கலைஞர் பதில்கள்' என்கிற பகுதி, 20-02-2016 சனிக்கிழமை 'முரசொலி'யின் முதற்பக்கம் முழுவதுமாக நிரம்பி வழிந்திருந்தது. அதில் ஒரு கேள்வி இப்படி இருந்தது: 'பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர்களை நியமனம் செய்ததில் பேரம் பேசப்பட்டது என்றும், தகுதியில்லாதவர்கள் எல்லாம் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார்களென்றும் குறைபாடுகள் கூறப்பட்டு வந்த நேரத்தில், அவசர அவசரமாக அந்தத் துணை வேந்தர்கள் நியமனம் நடைபெற்றுள்ளதே?' இது, பத்திரிகைச் செய்திகளைக் கொண்டு அவரே எழுப்பிக் கொண்டிருக்கிற ஒரு கேள்வி! அதற்கான பதிலைத் தன் பேனா முனையில், கலைஞர் இப்படி எழுதியிருந்தார்: 'ஏடுகளும், கல்வியாளர்களும்துணைவேந்தர்கள் நியமனம் பற்றிக் குற்றச்சாட்டுகளைக் கூறிவந்த நேரத்தில், அதைப்பற்றி இந்த ஆட்சியினர் கவலைப்படவே இல்லை. தற்போது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரைத் தேர்ந்தெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட மூவர் குழுவில் ஒருவரான பேராசிரியர் மு.ராமசாமி, தனது பதவியை ராஜி னாமா செய்ததோடு, தேர்வு நடைபெற்ற நேரத்தில் எப்படிப்பட்ட முறைகேடுகள் எல்லாம் நடைபெற்றன என்றும், அதைப்பற்றித் தான் எதிர்த்த நேரத்தில், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

"துணை வேந்தர்களின் நியமனங்கள் எவ்வாறு நடைபெற்றது என்பதற்குப் பேராசிரியர் மு.ராமசாமி அவர்கள் 'இந்து' நாளிதழுக்கு அளித்துள்ள விவரங்களே தக்க சான்றாக உள்ளன" என்று அவரின் பேனா, இரண்டு இடங்களில், 'பேராசிரியர் மு.ராமசாமி' என்று என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதே, அது முரசொலியின் முதற்பக்கத்தில் பதிவாகியுள்ளதே, நான் அவருக்கு நம்பக்கூடியவனாக இருந்திருக்கிறேன் என்பதையே எனக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. இதற்குமுன், 1987 வாக்கில், அறிவாலய நூலகத்திற்கு நூல்கள் வழங்கிய வகையில், முரசொலியில் வெளிவந்த நபர்களின் பட்டியலில், என் பெயரும், என் செண் பகம் பெயரும் பதிவாகி இருந்தது. இப்பொழுது, கலைஞர் அவர்களின் கருத்திற்குள் நுழைந்து, அவரின் பேனா முனையிலிருந்தும் 'பேராசிரியர் மு.ராமசாமி' ஆகிய நான், குதித்தெழுந்து வந்திருக்கிறேன் என்று மகிழ முடிகிறது. அவர் காலத்தில், அவர் மனசுக்குள், நானும் ஓர் ஓரத்தில் இருந்திருக்கிறேன் என்பது, என் வாழ்வில் என்றும் மறக்க முடியாதது.

கலைஞரின் மனசுதான் அவரின் பேனா! அவர் நெஞ்சைத் தொட்டுக் கிடப்பதால் மட்டுமில்லை; தூங்கிக் கிடக்கிற இந்தச் சமுதாயத்தை எழுப்பிவிட ஓயாமல் உழைத்துவரும் அவரைப்போல் அத ற்கும் உறக்கம் குறைவுதான்! ஜுன் 2008 இல் கலைஞரின் 85 ஆவது ஆண்டு பிறந்தநாள் விழாவின் முன்னெடுப்பாக, 'கலைஞரின் காவியப் பயணம்' என்று 'மு.கருணாநிதி சிறப்பிதழ்' ஒன்றை வெளியிட்டிருந்தது, 'இந்தியாடுடே' இதழ்! அதில் 'விருந்தினர் பக்கம்' என்பதாய், என்னிடம் கட் டுரை ஒன்று, இதழ் கேட்டிருந்தது. 'நெருப்பாற்றைக் கடந்த நாடகக்காரர்' என்றொரு கட்டுரை எழுதியிருந்தேன்.

இதை நிச்சயம் கலைஞர் வாசித்திருப்பார்! இதற்கான விளம்பரம் கலைஞர் தொலைக்காட்சியில் வெளிவரும்போது, அதில் மூன்று கட்டுரைகள் மட்டும் அருகமைக் காட்சியாகக் காட்டப்பட்டன. அதில் ஒன்று என்னுடையது'இந்த நெருப்பாற்றைக் கடந்த நாடகக்காரர்' என்கிற கட்டுரை! எதையெதையோ படித்துக் கடக்கிற அவர், அவரின் சிறப்பிதழின் அத்தனைக் கட்டுரைகளையும் உறுதியாகப் படித்திருப்பார். அவருக்குள், நிச்சயம் 'பேராசிரியர் மு.ராமசாமி', உள்ளுக்குள் ஊஞ்சலாடிக் கொண்டிருந்திருப்பான்! அவருக்கான நினைவுச் சின்னமாகப் 'பேனா'வை அப்பொழுதே நினைத்துப் பார்த்திருந்தவன் இந்தப் 'பேராசிரியர் மு.ராமசாமி' என்பது, அவருக்கு அப்போதே புரிந்திருக்கும்!



### உழவன் யார் ?

உழவனோர் மன்னன்;
நாற்று முடியிருக்கும் அவன் தலையில்!

உழவனோர் வீரன்; என்றும்
போர் இருக்கும் அவன் களத்தில் !

உழவனோர் ஓவியன்;
வயல்கள் அனைத்தும் அவன் வரைந்த
சித்திரம் !

உழவனோர் தெய்வம்;
உயிர்களைக் காப்பதால் !

- கலைஞர்